

# முருகனைத் தரிசிப்போம்

சக்திவேல் முருகனார்

தமிழ்ப் புலவர் ஒருவர் மிக நீண்ட காலம் தவமிருந்தார். திடீரென அவர் முன்னே ஓர் அற்புத ஒளிக்காட்சி; முருகப் பெருமான் புன்முறுவலோடு நின்றான்!

வேதக் காட்சிக்கும் உபநிட துச்சியில் விரித்த
போதக் காட்சிக்கும் காணலன்; புதியரில் புதியன்
மூதக்கார்க்கு மூதக்கவன் முடிவிற்கு முடிவாய்
ஆதிக் காதியாய் உயிர்க்குயிராய் நின்ற அமலன்

முன்னே நின்றவனின் காட்சி ஆயிரம் சூரியன் ஒருங்கே உதித்தது போல இருந்தது. கூசிய கண்ணைக் குவித்து கூர்ந்து உள்ளங் காலிலிருந்து உச்சிவரை பார்க்கிறார் புலவர்.

**தமிழ்க் கடவுள் முருகன்**

'பெருமானே! உன்னைத் தரிசிக்கத்தான் இத்தனை காலம் தவமிருந்தேன்!'– ஆனந்தக் கண்ணீர் பெருக வாய் குழறினார் புலவர். நெகிழ்ந்த நெஞ்சத்தை நிலைநிறுத்தி மீண்டும் முருகனைக் கூர்ந்து கவனிக்கிறார்.

'பெருமானே, இதற்கு முன் நான் உன்னைப் பார்த்ததில்லை. ஆனால் இப்போது உன் உருவத்தைப் பார்த்தால் இந்த உருவத்தை எங்கேயோ பார்த்தது போல தெரிகிறதே! ஏதோ பழகிய உருவம் மனத்தில் நிழலாடுகிறது.

'ஆம், அந்த கண்கள்! முகத்திற்கு மூன்றாக மொத்தம் பதினெட்டு கண்கள்! அவற்றைப் பார்க்கும்போது தமிழில் உள்ள புள்ளி எழுத்துக்கள் எனப்படும் மெய்யெழுத்துக்கள் பதினெட்டு போலிருக்கிறது. அது மட்டுமா! உன்னுடைய தோள்களை எண்ணிப் பார்க்கிறேன். மொத்தம் பன்னிரண்டு. எனக்கு தமிழின் உயிர் எழுத்துக்கள் நினைவிற்கு வருகின்றன. தமிழில் உயிரெழுத்துகள் பன்னிரண்டுதானே!

'அட, இது என்ன ஆச்சரியம்! உன் பொன் முடிகளை எண்ணிப் பார்க்கிறேன். மொத்தம் ஆறு. வல்லினம் ஆறு; மெல்லினம் ஆறு; இடையினம் ஆறு.

'அட, ஓர் எழுத்து விட்டுப் போயுள்ளதே என்று நினைத்தேன். உடனே அதற்கும் விடை கிடைத்துவிட்டது. அதாவது தமிழில் ஆயுத எழுத்து என்ற ஒன்று உண்டு. அது தமிழுக்கே மிகச் சிறப்பான ஓர் எழுத்து. அதைத்தான் தேடினேன். அட, இதோ இருக்கிறதே! உன் கரத்தில் பொலியும் வேல் இருக்கிறதே! கீழிரண்டு புள்ளிகள் – அவற்றின் நடுவே மேல் ஒரு புள்ளி, இதுதானே ஆயுத எழுத்து! இப்படி அமைந்த மூன்று புள்ளிகளையும் இணைத்தது போல இதோ உன் கையில் உள்ள வேல் திகழ்கிறதே.

'தமிழில் உள்ள எல்லாம் உன்னிடம் உள்ளது! தமிழ் வேறு, நீ வேறு இல்லை போலும்! அதனால்தான் உன்னை முன்பே பார்த்தது போல் ஓர் உணர்ச்சி எனக்குத் தோன்றுகிறதா! அதனால்தான் உன்னைத் தமிழ்க்கடவுள் என்று உலகம் அழைக்கிறதோ!'

முருகன் முறுவலித்தான். அதுதான் என்ன அழகு! அதில் மயங்கி கிறங்கிப் போனார் புலவர். எவ்வளவு நேரம் புலவர் அப்படியே நின்றார் என்பது அவருக்கே தெரியாது.

புலவரின் நீண்ட நாள் தவத்தின் அளவில் அவர் நாடிய முருகனின் திருக்காட்சி மங்கலாய்க் கரையத் தொடங்கியது. ஒளி, ஒளியத் தொடங்கியது! ஐயோ! மணங்கமழ் தெய்வத்து இவ்விள நலத்தை மீண்டும் எப்போது காண்பேன்! பரபரப்படைந்த புலவர் இறையுருவம் மறையுருவமாகக் கரைவதன் விரைவிற்கேற்ப விரைந்த சொற்களால் 'முருகா! உன் முகவரியைக்

**தியான நிலையில் முருகர்!**

திருச்செந்தூர் ஆலயத்தில் கர்ப்பக் கிருகத்தில் சூரசம்ஹார மூர்த்தியான பால சுப்பிரமணியர் திருவுருவம் விசேஷமானது.

அவர் சிவபூஜை புரியும் வகையில் தமது நான்கு திருக்கரங்களில் இரண்டை அபய, வரத முத்திரை காட்டியும், ஒரு கரம் ருத்திராட்ச மாலை தாங்கியும், மற்றொரு கரம் புஷ்பம் ஏந்தி பூஜை செய்யும் திருக்கோலத்தில் காட்சி தருகிறார். முருகப் பெருமான் தியான நிலையில் காட்சியளிக்கும் திருத்தலம் இது. -நெ.இராமன்

கூறு. நான் மீண்டும் உன்னைக் காண விழை கிறேன்' என்றார்.

பொருப்பது பொடிப்பட விடுத்திடு கைவேலா
இருப்பிடம் உனக்கெது எனக்கருள் இயம்பாய்!

சுவாமி சிரித்தாராம். 'எனக்கா! முகவரியா! நல்ல கூத்து இது!' 'கடவுள், யாண்டும் நிறைவு' என்று முருகன் நானென்று மார்தட்டிக் கொள்ள வில்லையாம். 'யார் யார் என் திருப்புகழை உள்ளம் உருகப் படிக்கிறார்களோ, அவர்களது உள்ளம்தான் எனது இருப்பிடம்' என்று கூறி மறைந்துவிட்டானாம்!

உருக்கநல் விழுக்குலம் ஒழுக்கமில ரேனும்
திருப்புகழ் படிப்பவர் மனத்தினில் இருப்பாம்

இது முருகன் பதில். இதில் திருப்புகழ் என்பதை அருணகிரியார் பாடிய திருப்புகழ் மட்டும் என்று கொள்ளக் கூடாது. முருகன் புகழ் விரிப்பது எல்லாம் திருப்புகழே! அது தான் பொருள் சேர் புகழ்!

புலவருக்குக் கண்கள் இருண்டன. தலை சுழன்றது. அப்படியே நிலை குலைந்து தரையில் விழப் போனார்.

அவரை ஆதரவுடன் ஒரு கரம் தாங்கிக் கொண்டது. நிலை தடுமாற்றம் நீங்கிய புலவர் தன்னைத் தாங்கிய கரத்தையும் அதற்கு உரிய வரையும் உற்றுப் பார்த்தார். அவரது உடலெங்கும் அண்மையில்தான் தீக்குளித்து ஆறிய வடுக்கள்.

அவர் புன்னகையுடன் கூறினார்: "ஆமாம்! நீர் நினைப்பது போல அண்மையில்தான் நான் தீக்குளித்தேன். சாதாரணத் தீயல்ல! தன்னிக ரில்லா தனிமுதல் பரம்பொருளின் நெற்றிக் கண் தீயில் குளித்து, அது தணிய மதுரை பொற் றாமரைக் குளத்தில் பாய்ந்து பயணம் மேற் கொண்டேன். என்னை நக்கீரன் என்பார்கள்."

"ஓ, சங்கத் தமிழின் தலைமைப் புலவ ரல்லவா தாங்கள்!" பணிந்து எழுந்தார் புலவர்.

"ஆம்! நீர் முருகப் பெருமானைத் தரி சித்தது, பணிந்தது, பரவசமானது எல்லாம்



திருப்பரங்குன்றம் கோவில்



கண்டேன். இவ்வாறு, பிறவாது இறவாத பெம் மான் முருகனைக் காண வேண்டும் என்று பிறவிதோறும் பல உடலில் ஏறி இறங்கி, முருகன் சேவடி படரும் செம்மல் உள்ளமொடு நெடும் பயணத்தை மேற்கொண்டு, அன்பர் யாவர்க்கும் உதவும்படி இதனைக் கூறுகிறேன்.

"அடைந்தோர்க்கு எல்லாம் ஆறுதலை வழங்கும் அந்த ஆறு தலைப் பரமன் அமர்ந்து இனிது ஒழுகும் இடங்கள் மொத்தம் ஆறு. அவற்றை நீர் அவசியம் தரிசிக்க வேண்டும். முதலில் அண்மையில் உள்ள திருப்பரங் குன்றத்தை நாம் தரிசிப்போம்."

"கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமைப் புலவரே! அந்த ஊர் எங்கே இருக்கிறது? அங்கே போனால் முருகனைத் தரிசிக்கலாமா?"

"அவசரப்படாதீர் புலவரே! நீரோ நீண்ட காலம் தவம் இயற்றி உடல் மெலிந்து இருக்கிறீர். என் கையைப் பிடித்துக்கொண்டு வாரும்! முருகனைக் காட்டுகிறேன்."

உடல் தளர்ச்சியைப் பாராமல் உற்சாகத் தோடு நக்கீரருடன் உலாப் புறப்பட்டார் புலவர். நக்கீரர் பரிவுடன் புலவரின் கையைப் பிடித்துக் கொண்டார். அவர் உள்ளத்தில் தாம் பெற்ற இறையருட் செல்வத்தைப் பிறருக்குப் பயனடையச் சொல்லும் வாய்ப்பு கிடைத்ததே என்று அவருக்கு மட்டில்லா மகிழ்ச்சி.

**திருப்பரங்குன்றம்:**

"நக்கீரரே!" புலவர் பேச ஆரம்பித்தார்.

"என்ன புலவரே?"

"நாம் என்ன, எண்ணி முடிப்பதற்குள் எழு



## சந்தன மரம் ஆகுவோம்!

திருப்பதி மலையில் ஓர் இடத்தில் சந்தன மரத்தின் மீது கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருந்தது:

''தன்னை வெட்டும் கோடாலி மீதும் தனது நறுமணத்தைப் பரப்பும் சந்தன மரத்தைப் போல உலகில் வாழ்ந்து காட்டுங்கள்.'' -உமாபதி

நூறு காதம் போகும் இந்திர ஞாலத் தேரிலா போகிறோம்? கால்நடைப் பயணம்; அதுவும் கடும் பயணம். எதுவும் பேசாமல் வந்தால் எப்படி? ஏதாவது சொல்லுங்கள், பேசிக்கொண்டே போனால் களைப்பு தெரியாதல்லவா?''

''என்ன சொல்வது?'' ஆர்வத்துடன் நக்கீரர் வினவினார்.

''திருப்பரங்குன்ற முருகன் பெருமையைச் சொல்லுங்கள்! இல்லை என்றால் என் சிற்றறிவைச் செழுமை செய்யும் செய்திகள் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்! எதுவும் இல்லையானால் 'பார்முதிர் பனிக்கடல்' கலங்க, உள் புகுந்து சூர் முதல் தடித்தச் சுடர் இலை நெடுவேலைப் பற்றிக் கூறுங்கள்.''

''அடடே! என்ன சொன்னீர்கள் புலவரே? கடலில் நின்ற சூரன் என்ற மாமரத்தை வேலால் பிளந்த முருகனென்று தானே சொன்னீர்கள்!''

''ஆம்! அது தவறா தலைமைப் புலவரே?''

''தவறொன்றும் இல்லை புலவரே! அதில் நாம் கூர்ந்து கவனிக்க வேண்டியது ஒன்று உண்டு. அதாவது கடலிலே மரம் முளைக்குமா? அதிலும் வேர் மேலேயும் இலைகள் கீழேயும் கடல் நீரில் அலையும்படி தலைகீழாக முளைக்குமா? அதோடு வேல் தொளைத்தவுடன் அந்த மரம் சுக்கு நூறாகப் பிளக்காமல் இரண்டே இரண்டு பிளவாகப் பிளந்தது அல்லவா?''

''ஆமாம்! நீங்கள் சொல்வது சரிதான். இவ்வளவு நாள் இது என் சிந்தைக்கு எட்டவில்லையே.''

''சூரன் ஆணவத்தின் அடையாளம். ஆணவம் இரு வகைப்படும். நான் என்பது ஒரு பக்கமும், எனது என்பது மறுபக்கமும் சரி பாதியாக இணைந்ததுதான் ஆணவம். இந்த இரண்டையும் வேலாகிய இறைஞானம் பிளக்கும் என்பதைத்தான் அதில் உணர்த்த சூரன் 'இருபேர் உருவின் ஒரு பேரியாக்கை' உடையவன் என்று உருவகித்தார்கள்.

''மரத்தில் வேர் மேலே இருந்தது அல்லவா? அது நாம் மேலிருந்து வான் வழியாக, மழை வழியாக நிலத்தில் வந்து பிறக்கிறோம் என்பதைக் காட்டுகிறது. மரத்தின் எண்ணற்ற இலைகள், கிளைகள் யாவும், நாம் செய்யும் எண்ணற்ற வினைகளையும் அவை கிளைத்துப் பெருகுவதையும் காட்டுகிறது. இலைகள் கடலில் திளைத்தன அல்லவா? அது எண்ணற்ற வினைகள் மூலம் நாம் தோயும் பிறவியாகிய கடலைச் சுட்டுகிறது.

''முருகன் இந்த மரத்தை வீழ்த்தியது, இறைவன் நம்மை ஆணவம், கன்மம், மாயை என்ற அவுணர்களின் கொடுங்கோல் ஆட்சியிலிருந்து விடுதலை செய்யும் அருட்கொற்றத்தைக் குறிக்கிறது. இவ்வாறான முருகனைப் புகழ்ந்து உரைப்பது நமது கடமை அல்லவா?'' என்று நக்கீரர் பெருமிதத்தோடு கூறினார்.

''ஆஹா, என்ன அற்புதமான கருத்து! இதைக் கேட்கக் கேட்க எனக்கு உடனே திருப்பரங்குன்ற முருகனைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆவல் அதிகமாகிறது சுவாமிகளே. திருப்பரங்குன்றம் இன்னும் எவ்வளவு தூரத்தில் உள்ளது?'' என்று புலவர் பரபரக்க ஆரம்பித்தார்.

''ஒன்றும் அதிக தூரத்தில் இல்லை! நாம் 'தீது தீர் நியமத்து மாடமலிமறுகின் கூடல்' (தீமைகளைத் தவிர்த்துச் செய்யும் வணிக வளாக மாடங்கள் நிறைந்த மதுரை) எனப்படும் மதுரையைத் தாண்டிவிட்டோம். இப்படியே சிறிது தூரம் மேற்கே நடப்போமானால் பரங்குன்றில் கால் பதித்துவிடுவோம். இதோ, அகன்ற வயல்கள் வந்துவிட்டனவே, அங்கே பாருங்கள். நீர் வளம் நிறைந்த வயல் நீரில் தாமரை என்ன அழகாக மலர்ந்திருக்கிறது!'' என்று நக்கீரர் நயந்து காட்டியதை வியந்து போற்றி உடன் சென்றார் புலவர்.

இரவு வந்தது. ஓரிடத்தில் அவர்கள் தங்கி வைகறைப் பொழுதில் மீண்டும் பயணமானார்கள்.

''அங்கே பாருங்கள்! அந்த நெய்தல் பூவில் வண்டு ஊதுகின்றது'' நக்கீரர் புலவருக்குக் காட்டினார்.

''ஆமாம், அதிலென்ன சிறப்பு?''

''அதிலென்னவா! அந்த வண்டு அப்படியே மேலெழுகிறது பாருங்கள்! மேலெழுந்து அது அப்படியே பரங்குன்றிற்கு அல்லவா செல்கிறது. பரங்குன்றில் அது செல்லுமிடம் இன்னும் நம் கண்ணை விட்டு மறையவில்லை. அங்கே மலைச்சுனை தெரிகிறது. சுனையில் நிறைய பூக்கள் உள்ளன. அதைவிட அவற்றைச் சுற்றும் வண்டுகளின் தொகை அதிகமிருக்கிறது. இதோ இந்த வண்டு, அந்த வண்டுக் கூட்டத்தோடு சேர்ந்துகொண்டு ஆரவாரம் செய்வதைப் பாருங்கள்.''

''தலைமைப் புலவரான தாங்கள் குழந்தை

## அமெரிக்காவில் ஸ்ரீராமகிருஷ்ண பக்தர்கள் மாநாடு

அமெரிக்காவில் உள்ள ஸ்ரீராமகிருஷ்ண மடத்துத் துறவிகள் மேற்கு மிச்சிகன் *(Western Michigan)* நகருக்கு அருகே அமைந்திருக்கும் ஓர் இடத்தில் ஜூன் 22, 23, 24 ஆகிய தேதிகளில் ஒரு மாநாடு நடத்தினர். இந்தியாவின் புனித நதியான கங்கையை நினைவுபடுத்தும் வகையில் இந்த இடத்திற்கு "கேன்ஜஸ் மி" *(Ganges Mi)* என்று புதிதாகப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

''மூன்றாவது புத்தாயிரத்தில் வேதாந்தம்'' என்ற தலைப்பில் மாநாட்டுச் சொற்பொழிவுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. மொத்தம் 16 சந்நியாசிகளும், சுமார் 800 அன்பர்களும் அமெரிக்காவின் பல இடங்களிலிருந்து வந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்கள்.

பல கிறிஸ்தவ அன்பர்களும் இந்த மாநாட்டில் பங்கு கொண்டார்கள். அவர்களுள் பலர், ''இந்த மாநாட்டில் கூறப்பட்ட கருத்துகள் இயேசுபிரானின் போதனைகளை ஒத்திருக்கின்றன; இந்த மாநாட்டில் கலந்துகொண்டதன் மூலமாக எங்களால், இன்னும் சிறந்த முறையிலே இந்த நாட்டு மக்களுக்குச் சேவை செய்ய நிறைய கற்றுக்கொள்ள முடிந்தது'' என்று கூறினார்கள்.

சிறப்பு விருந்தினராக அங்கு சென்றிருந்த சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி கௌதமானந்தர் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார். அதில் அவர் ஐந்து ஆன்மிகக் கொள்கைகளைக் குறிப்பிட்டார். அவையாவன:

1) மரபு வழியாய் வந்த நம்பிக்கைகள், நூல்கள், நிறுவனங்கள் கூறுகின்ற கருத்துகளில் உறைந்துள்ள உண்மையைக் கண்டுணரும் தைரியம்.

2) மக்கள் எல்லோரிடமும் இறைவன் உறைகிறான் என்பதை உணர்ந்து மனிதர்களுக்குத் தொண்டு செய்வது.

3) இறைவன் அன்பு மயமானவன் என்பதில் நம்பிக்கை கொண்டு, இறைவன் மீது கொண்டுள்ள எல்லாவிதமான பயத்தையும் நீக்குதல்.

4) நம் ஐம்புலன்களையும் தகாத வழிகளில் கொண்டு சென்று நம் உடம்பைத் தன் அடிமையாக்கிக் கொள்ளும் இச்சைகளிலிருந்து விடுபடுதல்.

5) வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோளை அமைத்துக் கொள்ளுதல். இறைவனை உணர்தல், ஞானத்தேடுதலும் உள்ளன்போடு தொண்டு புரிதலுமே நமது குறிக்கோள். இதையே எல்லையாகக் கொண்டு முழுமையான மனிதனாக வளர முயலுதல்.

மேற்கூறிய ஐந்து கொள்கைகளும் அமெரிக்கர் மட்டுமல்லாது, அனைவரும் கடைப்பிடிக்க வேண்டியவை என்று அவர் குறிப்பிட்டார்.



சுவாமி கௌதமானந்தர்

போல கூத்தடிக்கிறீர்கள்! இதிலென்ன அத்தனை பெரிய விஷயம் இருக்கிறது?''

''புலவரே, இதைப் பார்த்தால் உங்களுக்கு ஒன்றுமே புரியவில்லையா! முதல் நாள் இரவு தாமரையில் வண்டு புகுந்தது. அங்கேயே தேன் உண்டு மயங்கிவிட்டது. இரவானதும் தாமரை தன்னை மூடிக்கொண்டது. அது ஆன்மாக்கள் பிறப்பிற்கு வருவதற்கு முன் ஆணவமாகிய இருளில் மூழ்கிய கேவல நிலையைக் காட்டுகிறது.

''மறுநாள் காலை வண்டு நெய்தல் பூவில் மிக விறுவிறுப்பாகச் சுற்றி ஆரவாரித்தது. அது ஆன்மாக்கள் பிறவியெடுத்து ஓராயிரம் பணி ஆற்றுவதாகிய பிறவிசூழ் நிலையைக் குறிக்கிறது.

''பின்னர் வண்டு மேலெழுந்தது. இறைவன் அருளால் குரு வாய்க்க, அவர்தம் உபதேசத்தால் ஆன்மா மேன்மை அடைந்ததைக் குறிக்கிறது.

''சுனை மலர்களில் ஏற்கனவே வண்டுகள் தொகைதொகையாகச் சுற்றி ஆரவாரம் செய்தன. ஏற்கனவே அருள் பெற்ற அடியார்கள், திருவடி இன்பத்தில் திளைத்ததை அது காட்டுகிறது.

''இந்த வண்டு அந்த வண்டுகளோடு கூடி ஆரவாரம் செய்தது. புதிதாகத் திருவருள் பெற்ற ஆன்மா பழைய அடியார்களுடன் கூடி இறையின்பத்தைத் துய்த்ததை இது குறிக்கிறது.''

புலவர் இதைக் கேட்டு அதிசயித்தார். வாய் மூடி மௌனியானார். ''இப்படியே உங்களுக்கும் அருள் புரிவேன் என்று இதோ பரங்குன்றில் மீது பரமன் சிரிக்கிறான். வாருங்கள் சீக்கிரம்'' என்று நக்கீரர் அவசரப்படுத்தி புலவரை அழைத்துச் சென்றார்; முருகனைக் கண்ணாரக் கண்டுகளிக்கச் செய்தார்.

எத்தனையோ பிறவிகளில் நான் ஆற்றிய புண்ணியம் எல்லாம் திரண்டு வந்தாற் போல என் முன் தோன்றி, கந்தக் கடவுள் காட்சியை எனக்குக் காட்டிய நக்கீரருக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்? என்று புலவரின் நெஞ்சம் நெகிழ்ந்தது.

'வாழ்க நக்கீரர்! வாழ்க அவர்தம் சாகா வரம் பெற்ற சங்கத் தமிழ் நூல்கள்! வாழ்க பரங்குன்றம் பரமனாய் வரம் தந்த வடிவேலன்!' என்று புலவர் தம் மனமும் வாயும் தித்திக்க வாழ்த்தினார்.

நக்கீரரும் அந்தப் புலவரும் அத்துடன் நிற்கவில்லை. அவர்கள் பயணம் தொடர்ந்தது. ✳

அருள் செயல்படும்போது தாம் கேட்டது மட்டுமல்ல, மற்ற நல்லவைகளும் நடக்கும். -ஸ்ரீஅரவிந்தர்

## சத்தியவேல் முருகனார்

# முருகனின் திருவுருவ



**திருச்செந்தூர்:**

சங்கத்தமிழின் தலைமைப் புலவரான நக்கீரரையும், அவருடன் பொங்கும் பக்தியோடு முருகனைத் தரிசிக்கப் புறப்பட்ட புலவரையும் நாம் பரங்குன்றில் விட்டு (சென்ற மாதத் தொடர்ச்சி) வந்தோமல்லவா? அவர்களோடு நாமும் பயணம் செய்வோம்!

பரங்குன்றில் இரவு பள்ளியறைப் பூஜை நேரம்வரை முருகனை இருவரும் ஆர்வம் பொங்கத் தரிசித்து அகம் மகிழ்ந்தனர்.

கோயில் நடை சாத்தியவுடன் நக்கீரர் புலவரை அழைத்துக் கொண்டு தெற்கு நோக்கிப் பயணமானார்.

''நாம் எங்கே போகிறோம் சுவாமி?'' என்று புலவர் கேட்டார்.

''திருச்செந்தூருக்கு. முருகன் அங்கு செந்தில் ஆண்டவனாகக் காட்சி அளிக்கிறான்.''

நீண்ட பயணத்திற்குப் பிறகு செந்தூரை இருவரும் அடைந்தார்கள். புலவர் நடை மெலிவால் தளர்ந்தார்.

''புலவரே உமக்கு என்ன ஆயிற்று? அதோ பாரும், கோயில் கோபுரத்தின் மேல் தேவர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு துந்துபியை முழக்குகிறார்கள்.''

புலவர் விறுவிறுப்புடன் நக்கீரர் சுட்டிக் காட்டிய இடத்தைப் பார்த்து வியக்கிறார். கோயிலுக்குள்ளே பக்தர்கள் கொம்பு ஊதி எக்காளம் இடுகிறார்கள். கடல் வாழ் சங்குகள் தாமாக ஒலிக்கின்றன. எங்கிருந்தோ பறந்து வந்து மயில்கள் 'குகா! குகா!' என்று அகவுகின்றன.

இந்த இயற்கை வழிபாட்டைக் கண்டு அதிசயித்துக் கொண்டே செந்திலாண்டவனையும் அருகே அவன் சண்முகனாகக் காட்சியளித்ததையும் கண்டு களிக்கிறார் புலவர்.

''ஒரு சிறு சந்தேகம் சுவாமி'' என்றார் புலவர்.

''என்ன புலவரே, கேளும்'' என்றார் நக்கீரர்.

''இறைவனுக்கு ஏன் இத்தனை முகமும் இத்தனை கைகளும்?''

''எனக்கு இப்போது ஒரு சந்தேகம் தோன்றுகிறது. நீர் உண்மையிலேயே தவம் செய்தீரா என்பதுதான்!'' என்றார் நக்கீரர்.

''அடடா, நான் தவம் செய்தது உண்மைதான். வினாக்களில் அறிவினா – அறியாவினா என்று இரண்டு வகை உண்டல்லவா! நான் கேட்டது அறிந்துகொள்வதற்காகக் கேட்ட அறியாவினா!''

''அப்படியானால் சொல்கிறேன் கேளும்! முருகனின் ஒரு முகம், ஆணவ இருளை ஓட்டி ஞானச்சுடரை ஏற்றுகிறது.

''இரண்டாவது முகம், தன்னை அடைந்து துதிப்போர்க்கு வரம் அளிக்கிறது.

''மூன்றாவது முகம், தம்மை அடைபவர்க்கு ஏதுவாகும் மந்திரத்தைப் பேணிக் காக்கும் அந்தணர்களின் வேள்வியைக் காக்கிறது.

''நான்காவது முகம், மெய்ந்நூல்களின் உள்ளுறை ஞானத்தைச் சான்றோர்களுக்கு உணர்த்துகிறது.

''ஐந்தாவது முகம் ஞானத்திற்குத் தடைச் சக்திகளாக விளங்கும் அசுரர் என வர்ணிக்கப்படுபவர்களைப் போர் புரிந்து வென்று களவேள்வி செய்கிறது.

''ஆறாவது முகம், வள்ளிச் சன்மார்க்கம் என்று கூறப்படும் ஆன்ம மேல் நெறியை உருவகம் செய்யும்

வள்ளியிடம் முறுவல் செய்கிறது.''

''அப்படியானால் அந்தப் பன்னிரண்டு கைகள்?'' -புலவர் ஆர்வத்துடன் வினவினார்.

''அதுவும் சொல்கிறேன் கேளும். சூரியனின் வெப்பம் அப்படியே பூமிக்கு வருமானால் பூமி சாம்பலாகிவிடும். அவ்வாறு ஆகாதவண்ணம் பூமியின் பக்குவத்திற்கு ஏற்ப வெப்பம் தடை செய்யப்பட்டு அனுப்பப்படுகிறது. அதைச் செய்ய இறைவனால் நியமிக்கப்பட்ட வாலகிலிய முனிவர்கள் விண்ணிலே நிலைக்கும்படி அவர்களை ஒரு கை தாங்கி நிற்கிறது. ஒரு பக்கம் அவர்களைத் தாங்குவதால் அதற்கு உறு துணை செய்ய அதற்கு இணையான அடுத்த பக்கக் கை இடுப்பிலே ஊன்றி நிற்கிறது.

''ஒரு கை, செவ்வாடை போர்த்த தொடையின் மீது வைக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு கை, யானை வாகனத்தை ஓட்ட அங்குசத்தைச் சுழற்றிக்கொண்டிருக்கிறது.

''யானைப்பாகர் அங்குசத்தை ஒரு கையால் வீசும் போது இன்னொரு கை தொடையின் மேல் வைத்து ஊன்றுவது போல இது தோன்றுகிறது.

''ஒரு கை, வேலைச் சுழற்றுகிறது. அதற்கு இணையாக இன்னொரு கை, பரிசை என்ற படையைச் சுழற்றுகிறது. இவை இரண்டும் வேள்வி செய்யும் அந்தணரைக் காக்கின்றன.

''ஒரு கை மார்பொடு விளங்கி நிற்க, இன்னொரு கை மாலையைத் தடவுகிறது. ஒரு கை களவேள்வி செய்ய மேலே சுழன்று களவேள்விக்கு முத்திரை காட்டுகிறது. அதற்கு இணையாக மற்றொரு கை மணி ஒலிக்கிறது.

''ஒரு கை, மேகத்தைப் பிளந்து உலகோர் வேண்டும் மழையைப் பொழிவிக்கிறது. அதற்கு இணையான மற்றொரு கை, தெய்வ மகளுக்கு மணமாலை சூட்டுகிறது. புரிந்ததா புலவரே?''

## விளக்கம்

புலவர் விக்கித்துப் போனார். ''இதில் எனக்குப் பாதி புரிந்தது; பாதி புரியவில்லை சுவாமி'' என்றார்.

''பக்குவம் வரும்போது எல்லாம் புரியும்'' என்றார் நக்கீரர்.

செந்தூர் கடல் அலை அரோகரா என்று முழக்கமிடுகிறது. அதில் லயித்திருந்த நக்கீரரிடம், ''எவ்வளவு நேரந்தான் இந்தக் கடல் அலையையே பார்த்துக் கொண்டிருப்பீர்கள்?'' என்று வினவினார் புலவர்.

''நான் அலையை அல்ல, மயிலைக் கவனித்துக்கொண்டிருக்கிறேன். இதோ இந்த மயில் பழநியிலிருந்து வந்திருக்கிறது. முருகன் விரைவில் பழநிக்கு வரும்படி மயில் மூலம் நமக்குச் செய்தி அனுப்பி இருக்கிறார்'' என்றார் நக்கீரர்.



### திருவாவினன்குடி (பழநி)

திருவாவினன்குடியில் ஒரே கூட்டம். ''முருகனை இந்தக் கூட்டத்தில் நாம் தரிசிக்க முடியுமா?'' புலவர் சந்தேகத்தைக் கிளப்பினார்.

''அஞ்சேல்! அஞ்சேல்! ஆறுமுகன் நமக்குச் செய்தி அனுப்பிக் கூப்பிட்டிருக்கிறான். நிச்சயம் காட்சி தருவான். இவர்களெல்லாம் ஏதோ அவர்களுக்கு வேண்டிய வரங்களை வாங்கிச் செல்ல வந்திருக்கிறார்கள். இவர்கள் கலைந்து சென்றபின் கந்தக் கடம்பனைக் காணலாம்.''

''இவர்களெல்லாம் யார் சுவாமி?'' -புலவர் கேட்டார்.

''மரவுரி தரித்த இவர்களெல்லாம் போற்றுவதற்குரிய முனிவர்கள். அதோ அங்கே யாழ் வாசித்துக் கொண்டு இருப்பவர்கள் யாவரும் கந்தர்வர்கள். அதோ அங்கே கரிய திருமேனியுடன் உயரமாக இருக்கிறாரே, அவர்தான் திருமால். அங்கே பவள மேனியுடன்

பணம், ஆற்றல், திறமை இவையெல்லாம் வாழ்க்கைக்குரிய பொருள்களேயன்றி, அவையே வாழ்க்கை ஆகாது.–ஓர் அறிஞர்

பால் வெண்ணீறு பூசியவர் இருக்கிறாரே, அவரை சிவபெருமான் என்று எண்ணி விடாதீர்! அவர்தான் ருத்திரன். நாமெல்லாம் இரு கண் கொண்டு முருகனைப் பார்க்கிறோம். அதோ, ஆயிரம் கண்களோடு ஆறுமுகனைக் காண ஏங்கிக்கொண்டு நிற்கிறாரே, அவர் தான் இந்திரன்.''

''சுவாமி, இங்கே பிரம்மா யார்? பிரம்மா விற்கு நான்கு தலைகள் இருக்குமே! அப்படி யாரும் இங்கு இல்லையே!'' புலவர் கேட்டார்.

சிறிது யோசித்து கூட்டத்தைக் கூர்ந்து கவனித்த நக்கீரர் கையைச் சொடுக்கிக்கொண்டார்.

''ஓ! அதுதானா விஷயம்! நான்கு தலை யுடைய பிரம்மா இப்போது சிறையில் இருக் கிறார். அதனால் முருகனே படைத்தலைச் செய்கிறான். முருகனின் படைப்பு வேகத் திற்கு ஈடுகொடுக்க இயலாமல் திருமால் காத்தல் தொழிலையும், ருத்திரன் அழித்தல் தொழிலையும், ஏனையோர் அவரவர் தொழில்களையும் கைவிட்டதால், முருகனே முன் நின்று இவர்கள் எல்லோருடைய தொழில் களையும் சேர்த்து செய்கிறான்.

''மறுபடியும் பிரம்மாவையே படைத்தல் தொழிலைச் செய்யும்படியும், பிரம்மாவைச் சிறை விடுவிக்கும்படியும் இவர்கள் முரு கனை வேண்டி நிற்கிறார்கள். அதனால்தான் இந்தக் கூட்டத்தில் பிரம்மாவைக் காணோம்.''

''இந்தக் கூட்டத்திற்கிடையே முருகன் நம்மை ஏன் அழைத்தான்?'' புலவர் வழக்கம் போல் சந்தேகத்தைக் கிளப்பினார்.

''புலவரே! என்னைக் கேள்வியாலேயே கொன்றுவிடுவீர் என்று நினைக்கிறேன். சற்று பொறும்! முருகனுக்கு ஓலை எழுதிக் கேட்டுச் சொல்கிறேன்.''

முருகனிடமிருந்து பதில் ஓலை வந்தது. அதில் முருகன் இவ்வாறு எழுதியிருந்தான்:

''வரத்திற்காகவே வந்து தொந்தரவு செய்யும் கூட்டத்தைக் கண்டு அலுத்துப் போனேன். உண்மை அன்பர்களைக் காண விரும்பினேன். அதனால்தான் உங்களை அழைத்தேன்.''

நக்கீரரும் புலவரும் நெகிழ்ந்து போனார்கள். முருகன் மெல்ல நகர்ந்தான். ''ஆவினன் குடி அசைதலும் உரியன் போலும், (அசைதல் – ஒளிர்தல்; இடம் பெயர்ந்து அசைவான் என்பதும் பொருள்) நாமும் திருவேரகத் திற்குப் போவோம்'' என்று நக்கீரர் கூற இருவரும் புறப்பட்டனர்.

**சுவாமிமலை (திருவேரகம்)**

''நாம் இப்போது எங்கே போகிறோம்?''

சோழ நாட்டில் கும்பகோணத்திற்குப் பக்கத்தில் இருக்கும் திருவேரகத்திற்கு சுவாமிமலை என்ற பெயரும் உண்டு.

''ஓ! இதுதான் திருவேரகமா? அட, இங்கேயும் கூட்டம்!'' புலவர் பொருமினார்.

''இந்தக் கூட்டம் வேறு; திருவாவினன் குடியில் கண்டது, வானத்து இமையோர் கூட்டம்; இது நிலத்து இமையோர் எனப் படும் அந்தணர் கூட்டம்.''

''இதில் பெரும்பாலானவர்கள் இளை ஞர்களாகவே இருக்கிறார்களே! இவர்களுக்கு ஏறத்தாழ இருபத்தைந்து வயது இருக்குமா?''


''அதுதான் தவறு! ஒவ்வொருவருக்கும் குறைந்தது 48 வயதாவது ஆகியிருக்கும். இவர்கள் 25 வயது இளைஞர்கள் போல் காட்சி யளிப்பதற்குக் காரணம் இவர்கள் மெய்ந்

## மின்னொளி அம்பிகை

திருவாரூரில் பரவையாரை மணந்திருந்த சுந்தரர், திருவொற்றியூரில் சங்கிலியாரையும் மணந்துகொண்டார். சங்கிலியாரை மணப்பதற்குமுன் அவர் ''திருவொற்றியூரை விட்டு நீங்காமலும், உன்னைப் பிரியாமலும் இருப்பேன்'' என்று மகிழ மரத்தடியில் சத்தியம் செய்து கொடுத்திருந்தார்.

ஆங்காங்கு உறையும் இறைவனைக் கண்டு பாடாமல் இருக்க அவரால் முடியுமா? ஆதலால் திருவொற்றியூரிலிருந்து புறப்பட்டுவிட்டார்.

வாக்குத் தவறியதன் விளைவாக உடனே அவர் தமது கண்பார்வையை இழந்தார். திருவெண் பாக்கத்து இறைவன் அவருக்கு ஊன்றுகோல் கொடுத்து உதவினான். காஞ்சியில் இடக்கண்ணையும், திருவாரூரில் வலக்கண்ணையும் சுந்தரர் திரும்பப் பெற்றார் என்பது வரலாறு.



திருவொற்றியூரிலிருந்து திருவெண்பாக்கம்வரை சுந்தரர் எப்படி நடந்து சென்றார்? திருவெண்பாக்கத்து அம்பிகை, மின்னல்கொடிபோல், வழியெங்கும் தோன்றி அவருக்கு முன்னால் சென்றாள்.

அதே வழியில் சென்று, திருவெண்பாக்கத்தை அடைந்தார் சுந்தரர். அவருக்கு மின்னல்கொடி போல் தோன்றி வழிகாட்டியதால் திருவெண்பாக்கத்து அம்பிகை 'மின்னொளி அம்பிகை' என்றே பெயர் பெற்றாள். **-பருத்தியூர் கே.சந்தானராமன்**

## தீபாவளி அன்பளிப்புச் சந்தா

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் வாசகர்களாகிய உங்களுக்கு வெளியூர்களிலும், வெளிநாடுகளிலும், இருக்கும் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் நீங்கள் 'அன்பளிப்புச் சந்தா' என்ற வகையில், தீபாவளி வாழ்த்தாக பிறந்த நாள் வாழ்த்தாக/புதுமனை புகுவிழா வாழ்த்தாக/புத்தாண்டு வாழ்த்தாக/திருமண நாள் வாழ்த்தாக/பொங்கல் வாழ்த்தாக/மற்றும் எல்லா நற்செயல்களுக்கும் வாழ்த்தாக ஆண்டுச் சந்தா ரூ.75 (அல்லது 3 ஆண்டுச் சந்தா ரூ.200, அல்லது 5 ஆண்டுச் சந்தா ரூ.325, அல்லது 20 ஆண்டுச் சந்தா ரூ.800) செலுத்தி ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் அனுப்ப ஏற்பாடு செய்யலாம்.

இவ்விதம் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் அனுப்பியவர் பற்றிய விவரம், அதைப் பெறுபவருக்குத் தனியாகத் தபால் மூலம் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம் தெரிவிக்கும்.

**முக்கிய கவனத்திற்கு...** தாங்கள் செய்ய வேண்டியது இதுதான்: தங்களுக்குத் தெரிந்த உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் ஆகியோரைத் தாங்கள் அணுகி ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்திற்குக் குறைந்தது ஒரு புதிய சந்தாதாரரைச் சேர்த்துத் தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

**-ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியலாயம்**

நூல் விதித்த வழியில் பிறழாமல் 48 ஆண்டுகள் பிரம்மசரியம் காத்தவர்கள். எனவேதான் இளமையாகக் காட்சியளிக்கிறார்கள். இவர்கள் மார்பில் பூணூல் பார்த்தீரா?''

''ஆமாம், மூன்று புரிகள் கொண்ட பூணூல். ஒவ்வொரு புரியிலும் முந்நூல் இருப்பதால் ஒன்பது கொண்ட மூன்று புரி நுண் ஞாண்'' (மூன்று புரி நுண் ஞாண்= நுண்ணிய கருத்தாழம் கொண்ட மூன்று புரிகளையுடைய நூல்).

''அது எதைக் காட்டுகிறது தெரியுமா புலவரே? அவர்கள் இருபிறப்பாளர்கள். பூணூல் அணிவதன் முன் ஒரு பிறப்பு; அணிந்தபின் ஒரு பிறப்பு. ஆக இரு பிறப்பு உடையவர்கள். ஆதலால் இருபிறப்பாளர். கோழிக்கு முட்டையாய் ஒரு பிறப்பு. அதன் பின் முட்டையிலிருந்து குஞ்சாய் ஒரு பிறப்பு. அது போல பெற்றோரால் ஒரு பிறப்பும், அதன்பின் அருள் வழியால் ஒரு பிறப்பும் பெறுவதால் இருபிறப்பாளர். கோழிக்குஞ்சிற்குப் பார்ப்பு என்று ஒரு பெயர் உண்டு. அந்தப் பார்ப்பைப் போல இருபிறப்பு உடைமையால் இவர்கள் பார்ப்பு அன்னார் என்று அழைக்கப்பட்டு அது தற்காலத்தில் பார்ப்பனர் என்று மருவிவிட்டது.''

'' சுவாமி அவர்கள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டே முருகனை வலம் வருகிறார்களே!''

''புலவரே, நீர் என்ன கூர்ந்து கேட்டாலும் அது விளங்காது. காரணம் அவர்கள் கூறுவது மந்திரம். மந்திரத்தை உரக்கச் சொல்லக் கூடாது! ஐதுரைத்தல் என்று தமிழில் கூறுவார்கள். தனக்கு மட்டுமே கேட்கும்படி மெல்ல உச்சரித்தல் என்பது அதன் பொருள். இன்னொன்றைக் கவனியும்! தப்பித் தவறிகூட இவர்களிடம் பேச்சு கொடுத்துவிடாதீர். காரணம் மந்திரத்தையே உச்சரித்து உச்சரித்து வேறு சொல்லைக் கூற இவர்களது நாக்கு புரள மறுக்கும். நாவியன்று மருங்கின் நவிலும்'' (மருங்கு – பக்கம்; மந்திரமன்றி வேறு சொல்ல நாக்கு வேறு பக்கமாக இயங்கும் என்பது பொருள்).

''அப்படி என்ன மந்திரத்தை இவர்கள் உச்சரிக்கிறார்கள்?''

''ஓம் சரவணபவ எனும் ஆறெழுத்து மந்திரம்தான் அது. வாருங்கள்! நாமும் அவர்களைப் போலவே ஜெபிப்போம்.''

மந்திர ஜபத்திற்கும், தூவிய மலர்க்கும் மனம் மகிழ்ந்து ஏரகத்து இறைவன் அந்தணர்களுக்கும், நக்கீரருக்கும், புலவருக்கும் அரிய காட்சியை வழங்கினான்.

சீர்மலிந்த சுவாமிமலையில் கொன்றைச் சடையாராகிய சிவனார் மனம் குளிர பிரணவத்தினைக் கொஞ்சு தமிழால் தெளிவு படுத்திய குழந்தை முருகன் அளித்த அற்புதக் காட்சியில் நக்கீரரும், புலவரும் புல்லரித்துப் போய் நின்றனர். சுவாமிமலை கோயில் நடைசாத்திய பின்பே உலக உணர்வு பெற்று மலையிலிருந்து இறங்க, அவர்கள் கால்கள் நடந்தன; கண்களோ திரும்பத் திரும்ப மலை மேல் நின்ற மாமுருகனையே நோக்கின.

புலவரும் வழக்கத்திற்கு மாறாக வாய் மூடி மௌனம் காத்துக் கொண்டே வந்தார். அவர் வாய் ஓம் சரவணபவ என்னும் ஆறெழுத்தை ஓதிக்கொண்டிருக்க, அவர் காந்தத்தால் இழுத்துச் செல்லப்படும் இரும்புத்துண்டு போல் நக்கீரரைத் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தார். முருகனைத் தரிசிக்க மேற்கொண்ட அவர்கள் பயணம் மேலும் தொடர்கிறது. ✳

மனதில் உறுதி வேண்டும். வாக்கினிலே இனிமை வேண்டும். நினைவு நல்லது வேண்டும்.-பாரதியார்

சத்தியவேல் முருகனார்

# குன்றுதோறும் குமரன்

சுவாமிமலையில் முருகனைத் தரிசித்து விட்டு நக்கீரர் போன போக்கில் புலவர் ஆறெழுத்து மந்திரத்தை ஓதிக்கொண்டே பின்தொடர்ந்தார் என்று (சென்ற மாதத் தொடர்ச்சி) பார்த்தோம் அல்லவா?

புலவர் மௌனத்தைக் கலைத்தார்.

''நக்கீரர் அவர்களே! அடுத்து எங்கே?'' புலவர் வினவினார்.

''எங்கெல்லாம் குன்று இருக்கிறதோ, அங்கெல்லாம் குமரன் உறைகின்றான். அப்படிப்பட்ட குமரனைக் காண்போம் வாருங்கள்''.

'குன்றுகள் நிலமட்டத்தைவிட உயர்ந்திருக்கின்றன. உயர்ந்த ஒன்றைக் குன்று என்பது சரியா? குன்று என்றால் குறுகு என்பதுதானே பொருள். தாங்கள் சங்கத்தமிழின் தலைமைப் புலவர். தாங்களே இதற்குச் சரியான விடையளிக்க வல்லவர்'.

''சரியான கேள்வி புலவரே. நில மட்டத்தில் நாம் நிலவும்போது மேடு–பள்ளம், மச்சு வீடு–குச்சு வீடு என்பது போன்ற ஏற்றத் தாழ்வுகள் எல்லாம் தெரியும். ஆனால் உயரத்தில் போகப் போக எல்லாம் ஒன்றாகத் தெரியும். அங்கே பேதங்களே கிடையாது. எனவேதான் நம் சங்கத்து உறுப்பினர்களுள் ஒருவரான ஔவை 'ஒன்றாகக் காண்பதுவே காட்சி' என்று பாடினார்.

''எனவே பேதங்கள் எல்லாம் எங்கே குன்றுகிறதோ அதைக் குன்று என்றும், அவ்வாறு பேதங்கள் குன்றுகிற இடத்தில் தான் ஆண்டவன் இருப்பான் என்று காட்டுவது போல குமரன் குன்றுதோறும் குடி இருக்கிறான். இன்னும் குன்றின் மீது ஏற ஏற நான் இவ்வாறு பெரியவன், அவ்வாறு சிறந்தவன் என்று பெருமை பேசுவதெல்லாம் ஒழிந்து, ஆண்டவன் படைப்பில் நாம் எவ்வளவு அணுவாகக் கிடக்கிறோம் என்ற எண்ணம் மேலோங்கும். நமது வீண் பெருமை, ஆணவ மொழி எல்லாவற்றையும் குன்றிடச் செய்வதாலும் அதற்குக் குன்று என்று பெயர்.

''குன்றுதோறும் குமரனை நாம் சென்று வணங்கும்போது ஒன்றைப் பார்த்தீர்களா? குமரனைக் குறவர்களும் வணங்குகிறார்கள். குறிஞ்சி தெய்வமல்லவா குமரன்? குறவர்கள் முதலில் தம்முள் கூடிக் கள்ளுண்ட பின்னரே குமரனை வணங்குகிறார்கள். அவர்களுக்கும் முருகன் அருள்வானா?'' என்று புலவர் வினவினார்.

''நிச்சயம் அருள்வான் புலவரே. தெய்வம் என்றால் அது எல்லோர்க்கும் பொது. அங்கே ஏரகத்திலே, அந்தணர்கள் முருகனை வணங்கியதைப் பார்த்தோம். அவர்களுக்கும் முருகன் அருள்புரிகிறான். அவன் மேட்டுக்குடி மாந்தர்க்கு மட்டும் சொந்தமானவன் அல்லன். மந்திரமே எல்லாம் என்று நினைப்பதும் ஒரு மயக்கம்தானே!. அங்கே மந்திர மயக்கம்; இங்கே குறவர்களிடையே மொந்தை மயக்கம். எதுவானாலும் உண்மை பக்திக்கு அருள் புரிவதுதானே ஆண்டவன் நீதி. எனவேதான் அந்தணருக்கும் குறவருக்கும் ஒப்ப அருள் புரிகிறான் முருகன்''.

''ஆஹா! அற்புதமான விளக்கம்!''.

''அது மட்டுமல்ல, ஓர் அரசனுடைய மூன்று வயதுக் குழந்தைக்குத் தின்பண்டம் வழங்க, அதை அது வாயிலிட்டுக் குதப்பிக் கையில் எடுத்து அரசன் வாயில் ஊட்டுகிறது. அரசன் மகிழ்ச்சியோடு அந்த எச்சிலை ஏற்பான். இதைப் பார்த்த மந்திரியும் அதே மாதிரி எச்சிலை அரசனுக்கு ஊட்டினால் அரசன் மகிழ்வானா?

''குறவர்கள் குழந்தைகள் போன்றவர்கள். எனவே முருகன் அவர்கள் எச்சிலை ஏற்பான். என் காலத்திற்குப் பின்னால் வரப்போகும் ஒரு புலவர் (வள்ளலார்) இதையே கருத்தில் கொண்டு 'குறவர் குடிசையில் நுழைந்தாண்டி. அந்தக் கோமாட்டி எச்சிலை விழைந்தாண்டி' என்று பாடப் போகிறார். எனவே பக்தி மட்டுமல்ல, அவரவர் பக்குவமும் இங்கே அளவுகோல் என்பதை உணர வேண்டும்''.

''நக்கீரரே! நாம் இன்னும் எங்கேயாவது போகப் போகிறோமா?'' புலவர் ஆர்வத்துடன் கேட்டார்.

''ஆம். நாம் அடுத்து போக வேண்டிய இடம் பழமுதிர்ச்சோலை'' என்றார் நக்கீரர்.

## பழமுதிர்ச்சோலை:

''பழமுதிர்ச்சோலையோடு நாம் முருகனைக் காணும் இடங்களின் வரிசை முடிகிறது அப்படித் தானே?'' புவலர் கேட்டார்.

''யார் சொன்னார்கள்? மலை தோறும் முருகனைக் காண லாம் என்பதுதானே உங்கள் எண்ணம். மலைதோறும் மட்டுமல்ல, எடுக்கும் விழா எதுவானாலும் அந்த விழாவின் எழிலில் முருகன் காட்சியளிப்பான்''.



''அப்புறம்?''

''திருப்புகழ் படிப்பவர் மனதினில் இருப்போம்'' என்று முருகன் உம்மிடம் கூறினாரல்லவா?''

''ஆமாம்?''

''எங்கே வேலாட்டம், காவடியாட்டம் போன்றவை நிகழ்கிறதோ, அங்கெல்லாம் முருகன் இருப்பான் ''

''அப்புறம்?''

''காட்டின் கவினில் (அழகில்) இருப் பான்; பொழிலின் தண்மையில் பொலி வான்; ஜீவ நதியில் கலந்து காட்சி யளிப்பான்; ஊர் மக்களுக்குப் பயன் தரும் ஊருணியில் (கிணறு) இருப் பான்; நாற்சந்தியில் இருப்பான்; நீதிமன்றத்தில் நிகழ்ந்து காட்டு வான். இதுதான் கடவுள் என்று எதைக் குறியிட்டு வணங்கினாலும் அங்கே வந்து அருள்வான். லிங்கத் தில் வணங்கினால் அங்கே யும் முருகனே முன்னிற் பான். பொதுவாக எங்கெல் லாம் அழகுணர்ச்சி மிகுந்து தோன்றுகிறதோ, அங்கெல் லாம் முருகன் தோன்றுவான். காரணம் முருகனே அழகு; அழகே முருகன்''.

''பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைந் திருக்கிறான் என்றால், நாம் மிக எச்சரிக்கை யாக இருத்தல் வேண்டும். அப்படி முரு கனைப் பார்த்தவுடன் நான் செய்ய வேண்டி யது என்ன?''

இந்த உலகம் ஆற்றல் நிறைந்தவர்களுக்கே உரியது.-எமர்சன்

''வணங்குவீராக! முகமலர்ந்து வாயால் வாழ்த்து கூறிக் கையால் தொழுது அவன் திருவடியில் விழுந்து வணங்குவீராக!''

''மற்றதெல்லாம் நான் செய்துவிடுவேன். வாயால் வாழ்த்து கூறுதல் என்பதில்தான் என் மனம் தடுமாறுகிறது. இறைவனை என்ன சொல்லி வாழ்த்துவேன்?''

''அறுவர் பயந்த ஆறமர் செல்வ **(கார்த்திகைப் பெண்டிர் ஆறு பேர் வளர்க்க சரவணப் பொய்கையில் ஆறு தாமரையில் அமர்ந்த செல்வனே!)** என்று போற்றி செய்க!

''ஆல்கெழு கடவுட் புதல்வ**(கல்லால மரத்தில் சனகாதி நால்வர்க்கு அருளிய சிவனுடைய புதல்வனே!)** என்று போற்றுக!

''மாற்றோர் கூற்றே **(பகைவர்களுக்குக் கொடும் பகை போன்றவனே!)** என்று போற்றுக!

''வெற்றிவேல் போர்க்கொற்றவைச் சிறுவ **(வெற்றிவேலுடன் போரிடும் கொற்றவைத் தெய்வத்தின் மகனே!)** என போற்றிடுக!

''இழையணி சிறப்பிற் பழையோள் குழவி **(பொன்னணி அணிந்து பொலியும் பழையவளான உமையின் மதலையே!)** என்றிடுக !

''மாலை மார்ப, நூலறி புலவ **(மாலைகளை அணிந்த மார்பை உடையவனே! நூல்களின் உண்மைப்பொருளை உணர்ந்திடும் புலவனே!)** என்று போற்றி செய்க!



''இப்படி முருகனை உம்மால் இயன்ற அளவில் போற்றுக! வடமொழி மந்திரங்களைத்தான் சொல்ல வேண்டும் என்று நினைக்காதீர்! உம் அறிவிற்கு எட்டிய அளவு எதுவோ, அதுவரை சென்று புகழ்ந்து போற்றி செய்க! ஏனெனில் எதுவாயினும் அவன் புகழ் எல்லையைச் சிறிதளவேனும் எட்டியது ஆகாது. அப்புறம் வடமொழி என்ன? தமிழ் மொழி என்ன? பெருமானே! நின் திருவடியை எண்ணி வந்தேன் என்று அவன் பாதங்களில் உண்மை பக்தியுடன் வீழ்கிறோமே, அதுதான் முக்கியம்!''

''அப்படி வீழ்ந்தால் என்னவாகும்?''

''நீர் எத்தனைக்கெத்தனை நெகிழ்கிறீரோ, அத்தனைக்கத்தனைச் சிறப்பு அடைவீர். அதனைக் கண்டு முருகனின் அணுக்கத் தொண்டன் உம்மைப்பற்றி முருகனிடம் போய் உரைப்பான். 'பெருமானே! உமது திருச்சந்நிதி வாயிலில் ஒரு பக்தன் வந்திருக்கிறான். முருகா! முருகா! என்றுரைத்து நைந்துருகி நெக்கு நெக்கேங்கிக் கதறுகிறான். உமது திருவடியைப் பிச்சைக் கேட்கும் இரவலன் அவன். அவனது வாய் ஓயாமல் உன்னையே புகழ்ந்து கொண்டிருக்கிறது என்பான்' ''.

''அப்புறம்?''

''அப்புறமென்ன? முருகன் இரங்கி உம் முன் தோன்றி நிற்பான். அவன் முதலில் உம் அழுகையை நிறுத்தி 'அஞ்சேல்! நீ வருவாய் என்பதை நான் முன்னமே அறிவேன்!' என்று ஆறுதல் கூறுவான். அப்புறம் அன்பைப் பொழிந்து வீடுபேற்றை நல்குவான்''.

''அப்படியா! அப்படியா!'' தழுதழுத்தது புலவர் குரல்.

''இதோ! நாம் பேசிக்கொண்டே பழமுதிர்ச்சோலை மலைக்கு வந்து விட்டோம். எங்கே முருகன் என்று கேட்காதீர். நான் ஏற்கெனவே கூறியது போல இந்தச் சோலையின் எழிலைக் காணுங்கள்! அந்த எழிலில் முருகனைக் காணுங்கள்! இந்தச் சோலை மலையின் எழிலுக்கு உரியவன் முருகன் அல்லவா? அவன் சோலைமலைக் கிழவன் அல்லவா?'' உணர்ச்சி பொங்க விவரித்துக் கொண்டே போனார் நக்கீரர்.

திடீரென திரும்பிப் பார்த்தால், 'ஆ! இது என்ன! உடன் வந்த புலவரைக் காணோமே! 'முருகா!' என்று அலறினார் நக்கீரர்.அவர் முன்னே முருகன் முறுவலித்து நின்றான்.

''என்ன திகைக்கிறாய் நக்கீரா! உன்னோடு பயணம் செய்த புலவர் யாமே! எமது காட்சி கண்ட அப்புலவன் அக்கணமே என்னோடு இணைந்துவிட்டான். அப்புலவனாக உன்னுடன் பயணம் செய்து உன்னிடம் 'திருமுருகாற்றுப்படை'யைப் பெறவே இந்த ஆடல் செய்தோம். (இல்லாவிட்டால், உடன் வந்த புலவரை யாம் இருக்கும் ஆறு சிறப்புத் தலங்களுக்கு ஆற்றுப்படுத்துவதாக அமைத்து திருமுருகாற்றுப்படை என்னும் அரிய தமிழ் நூலை ஆக்கி அளித்திருப்பீரா?). ஆனால் ஒரே ஒரு குறை! முடிக்கும்போது எம்மைக் கிழவன் எனப் பாடிவிட்டாய்! யாம் கிழவனா?'' - முருகன் புன்னகையுடன் கேட்டான்.

''பெருமானே! எல்லாவற்றிற்கும் உரிமையாளன் நீயே என்ற பொருளில்தானே உன்னைக் கிழவன் என்று கூறினேன். இதை நீயும்

சுவாமி விமூர்த்தானந்தர்



# எங்கே இருக்கிறார் விவேகானந்தர்?

**ப**கவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் சீடரான சுவாமி சுபோதானந்தரின் அந்திமக் காலம்.

உடல் உபாதை பெரும் தொல்லை கொடுத்தாலும் அதனாலெல்லாம் அவர் கலங்காமல் அமைதியாய் இருந்தார். இறைவனைத் தரிசித்தவர்களுக்கு மரணப் படுக்கைகூட மெத்தையாகிவிடுகிறது!

சுகமாகத் தூங்குபவர்களுக்குச் சுகமான கனவுகள் வரும்! பரமபுருஷரான சுவாமி சுபோதானந்தருக்குப் பரம சுகமான கனவு ஒன்று வந்தது.

அந்தக் கனவில் அவர் சுவாமி பிரம்மானந்தர், சுவாமி பிரேமானந்தர், சுவாமி யோகானந்தர் ஆகிய மூன்று சுவாமிகளையும் தரிசித்தார். ஆனால் சுவாமி விவேகானந்தரை மட்டும் தரிசிக்கவில்லை?

சுவாமி சுபோதானந்தர் உடனே அந்த மூன்று பேர்களிடமும், ''சுவாமிஜி எங்கே?'' என்று வினவினார்.

அதற்கு அவர்கள், ''சுவாமிஜி இங்கு இல்லை. அவர் மேலே... மேலே பரம்பொருளுடன் ஆழ்ந்திருக்கிறார்'' என்றார்கள்.

பரபரப்படைந்த சுவாமி சுபோதானந்தர், ''சுவாமிஜி எங்கே இருந்தாலும் பரவாயில்லை, நான் அவரிடம் உடனடியாகப் போய்த்தான் ஆக வேண்டும்'' என்று கூறி சுவாமிஜி இருந்த இடத்தை அடைந்தார்.

சுவாமி சுபோதானந்தருக்கு அகமெல்லாம் ஆனந்தம். ஏதோ ஆனந்த சாகரத்தில் திளைத்ததுபோல் ஒரு பெரும் அனுபவம் அவருக்குக் கிட்டியது!

கனவு கலைந்தது. கனவில் தமக்குக் கிடைத்த அனுபவத்தை அவர் தமது சகோதரச் சீடரான சுவாமி சிவானந்தரிடம் கூறினார்:

''சுவாமிஜி மற்றும் இதர சகோதர சுவாமிகள் மேலான ஆன்மிகப் பேரின்பத் தளங்களில் திளைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தளங்களை விட்டுவருவது மிகவும் கடினம். எல்லாத் துன்பங்களும் இந்த உலகில்தான். நான் அந்த மேலான ஆன்மிகத் தளங்களில் சொல்ல முடியாத அளவிற்கு ஆனந்தத்தை அனுபவித்தேன்''.

இந்த அனுபவத்திற்குப் பிறகு சில நாட்களுள் சுவாமிகள் மகாசமாதி அடைந்தார்.

சுவாமி சுபோதானந்தரின் ஜென்ம தினம் கார்த்திகை 12, செவ்வாய்க்கிழமை (27.11.2001)

**சு**வாமி விஞ்ஞானானந்தர் குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணரின் மற்றொரு சீடர் ஆவார்.

அவர், ஒரு முறை பரத்வாஜ ஆசிரமத்திற்குச் சென்றிருந்தார். அங்கே இருந்த சப்தரிஷிகளின் படத்தை அவர் கண்கொட்டாமல் பார்த்தார். பிறகு அவர் ஜெய்ப்பூரிலிருந்து ஒரு சிறந்த ஓவியரைக் கொண்டு சப்தரிஷிகளின் படங்களை வரையச் செய்தார்.

அந்த ஓவியத்தை சுவாமிகள் தமது சொந்த அறையில் மாட்டி வைத்தார்.

இது சம்பந்தமாக விஞ்ஞான் மகராஜ், ''சுவாமிஜி எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்துள்ளார். ஆனால் சப்தரிஷி மண்டலம் தான் அவருடைய உண்மையான ஸ்தானம்; அவர் அங்கிருந்து கொண்டே பிரபஞ்சத்தை ஆள்கிறார்'' என்று கூறினார்.

சுவாமி விஞ்ஞானானந்தரின் ஜென்ம தினம் கார்த்திகை 14, வியாழக்கிழமை (29.11.2001)

பசித்தவனுக்குக் கிடைத்ததெல்லாம் ருசியாகத்தான் இருக்கும்.- அப்துல் ரஹீம்

அறிவாய்! இருப்பினும் என்னுடன் இப்படி ஓர் ஆடல் செய்கிறாய்! அந்தச் சொல்லில் முதுமை என்பதும் உடன் தொக்கி நிற்பது உண்மைதான். நீ என்றும் இளையவனே!

முருகன் இன்முறுவல் பூத்தான். ''நீ பாடிய இத்திருமுருகாற்றுப்படையையே மந்திரமாகக் கொண்டு ஆற்றுவதை நாம் நமக்குச் செய்யும் நனிசிறந்த பூசையாக ஏற்போம்!'' என்று முருகன் கூறி நக்கீரரை அணைத்து அருள் புரிந்தான். கந்த சஷ்டித் திருநாள், கார்த்திகை 6, புதன்கிழமை (21.11.2001)